# கடற்கரை கவியரங்கு– 664

## நாள்: 02-08-2026

# எதைத்தான் அறிவோம்?

வானம் நம்பூமிக்கு வகுத்தநல் நியதிதான் எதுவுண்டு?
கானம் இசைக்கும் கருங்குயிலைப் படைத்ததும் ஏனோ?
தேனாய் நாள்கள் திகழ்ந்திட வேண்டிச் சிந்தையிடு!
தானாய் எதுவும் இங்கே நிகழாது என்பதைநீ யறிந்திடு!

வீணாய்ப் பொழுதை என்றும் விரயம்செய்துத் திகழாதே!
கோனாய் மண்ணில் நிலைத்திட கொள்கை யொன்றை,
பூணாய் மனதிலேற்றிகொண்டு என்றும் நீயும் செயல்படுக!
தானாய் நின்று மகிழ்வைத் தந்திட எதுதான் உண்டோ?

தானாய் எதுவும் நிகழ்வதில்லை என்பதைநீ உணர்ந்திடுக!
மீனும்நீந்திக் களித்திடுமே இரையாய் தானும் ஆகும்வரை!
மானும் ஓடியே தப்பிக்கும் இரையாய் ஆகுமோர் நிலையிலே!
மானுடச் சிந்தையில் தோல்வி, மரணம் வரைப் போராடும்!

யாவையும் படைத்து விளையாடும் அந்த இறையெனும்
மாயத்தை யாரேனும் அறிந்திடத்தான் முயல்வோமோ?
‘காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா!’
ஓயாமல் சொன்னாலும் யார்முடிவை யார்தான் அறிவரோ?

மாயமாய் நிகழுமிந்த மாயவித்தையின் தூதுவன் தானோ?
சேயாய் காப்பவனோ? சிதைந்திடவும் அவன் செய்வானோ?
நீயாக அதனைத் தேடிவிடு நெறிகொண்டு உணர்ந்திடவே!
மாயமாய் யாவும் நிகழ்த்தும் அவனோ, அவளோ எதுவோ?

தூய மனம் கொண்டால் துலங்கிடுமோ அறிவின்வழி யாவும்?
மாயமாம் சக்தியதை மறுவின்றிப் பரம்பொருளாய் உணர்ந்து,
நோயில்லா நன்நிலையில் நெடிது வாழ, அவரவர் வழியில்
தீயில்லா மனத்துடனே பரம்பொருளை உணர்ந்து வாழ்வோம்!

**- கவிஞர் கவிவளவன்.**
02-08-2026